## பத்திரிக்கைச் செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது

திருச்சி மாவட்டம் முசிறி வட்டம் தேவனூர் புதூர் நெசவாளர் காலனியை சேர்ந்தவர் ராமைய் மகன் செல்லதுரை. ராமையாவுக்கு தேவனூர் புதூர் கிராமத்தில் சுமார் 1.25 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. ராமையா கடந்த பிப்ரவரி 2021ல் இறந்து விடுகிறார். இவரது வாரிசுகளாக இவரது மனைவி அமுதா மகன்கள் செல்லதுரை, சுரேந்தர் மற்றும் சுபத்திரா என்ற மகளும் உள்ளனர். மேற்படி ராமையா பெயரில் உள்ள சொத்துக்களை அவரது வாரிசுகள் நால்வரின் பெயர்களில் மாற்றுவதற்காக ராமையா மகன் செல்லதுரை தேவனூர் புதூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.விஸ்வநாத் அவர்களை கடந்த 30.12.2021 அன்று அணுகி ராமையா பெயரிலிருந்து அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் பட்டா பெயர் மாற்றம் செய்து தர கோரியுள்ளார். அதற்கு வி.ஏ.ஓ. விஸ்வநாத், ரூ.4,000/- கொடுத்தால் மட்டுமே, பட்டா பெயர் மாற்றம் செய்து தர முடியும் என்று கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத செல்லதுரை, திருச்சி லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் லஞ்ச ஒழிப்பு பிரிவு டி.எஸ்.பி. திரு.மணிகண்டன், துலைமையிலான போலீசார், இன்று 03.01.2023 மதியம் செல்லதுரையிடமிருந்து விஏஓ விஸ்வநாத் ரூ.4000/- லஞ்சம் பெற்ற போது கையும் களவுமாக பிடிபட்டார். திரு.செல்லதுரை, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு பட்டா பெயர் மாற்றம் கோரி அளித்திருந்த விண்ணப்பத்தின் பேரில் ஏற்கனவே விஏஓ விஸ்வநாத், லஞ்சம் கேட்டதை செல்லதுரை கொடுக்க மறுத்ததால் அவரது விண்ணப்பம் விஏஓ விஸ்வநாத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**PRESS NOTE**

**VAO TRAPPED & ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE FOR PATTA NAME TRANSFER**

The complainant Tr.Chelladurai, S/o Ramaiah, is residing at Devanoor Pudur Village, Musiri Taluk, Trichy District, having 1.2 Acre Agricultural land in his father's name. Due to demised of Tr.Ramiah, the complainant had applied patta name transfer from his father name to his family members at Devanoor Pudur Village Administrative Office, Musiri Taluk, Trichy District on 30.12.2021, for which Tr.Viswanath, Village Administrative Officer, Devanoor Pudur Village, Musiri Taluk, Trichy District demanded Rs.4,000/- as bribe for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Trichy detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today 03.01.2023, Tr. Viswanath, Village Administrative Officer, reiterated his demand and received the bribe amount of Rs.4,000/- from the complainant. The accused was arrested. Already the petitioner applied patta name transfer few months ago but the petition was rejected by the VAO for want to bribe.